[illegible]: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 17 புதன்கிழமை 02 09 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 279

## சாய்ந்தமருது சந்தையில் குண்டுவெடிப்பு! 22 பேர் உயிரிழப்பு!! 40 பேர் படுகாயம்!!!

கொழும்பு, செப். 2

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தையில் நேற்றுக் காலை திடீரென வெடித்த குண்டு ஒன்றில் 22 பொதுமக்கள் உயிரிழந்தனர். நாற்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்தவர்கள் பெரும்பாலும் முஸ்லிம்கள் என்று தெரியவந்தது.

சந்தையில் ஐஸ்கிறீம் பெட்டி ஒன்றுடன் கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள் ஒன்று காணப்பட்டதாகவும்—

அந்த ஐஸ்கிறீம் பெட்டிக்குள் இருந்த குண்டே வெடித்தது என்றும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது.

சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த மீன்பெட்டி ஒன்றுக்குள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாஸாவுக்கு எதிரான தேர்தல் வழக்குத் தள்ளுபடி!

## உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐவரும் ஏகமனதாகத் தீர்ப்பு

கொழும்பு, செப்டம்பர் 2

1988ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஆர். பிரேமதாஸா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை — மிக நீண்டகால விசாரணையின் பின்னர் — நேற்று உயர்நீதிமன்றம் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தது.

வழக்கை விசாரணை செய்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐவரும் இத்தீர்ப்பை ஏகமனதாக வழங்கினர்.

பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா, நீதியரசர்கள் பி. இராமநாதன், பிரியந்தா பெரேரா, ஏ. எஸ். விஜேதுங்க, எஸ். பி. குணவர்த்தன ஆகியோர் இத்தீர்ப்பை வழங்கினார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரும் அக்கட்சியின் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

தேர்தலில் வெற்றியீட்டிய திரு. ஆர். பிரேமதாஸா மற்றும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா ஆகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தீர்ப்பை அடுத்து கொழும்பில்

## பட்டாசுச் சத்தங்கள் காதைப் பிளந்தன!

கொழும்பு, செ. 2

ஜனாதிபதித் தேர்தல் வழக்கின் மீதான தீர்ப்பு நேற்றுக் காலை வாசிக்கப்பட்டதும் கொழும்பு முழுவதிலும் சுமார் ஒரு மணி நேரத்துக்கு பட்டாசுச் சத்தங்கள் காதைப் பிளந்தன என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தீர்ப்பு வழங்கப்படுவதை ஒட்டி நேற்று கொழும்பு நகரம் எங்கும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சுமார் 300 பொலீஸார் நீதிமன்ற வளாகத்தைச் சுற்றிக் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

மேலும், சுமார் 2000 பொலீசாரும் பொலீஸ் கலகம் அடக்கும் பிரிவின் பல்வேறு குழுக்களும் கொழும்பு நகரின் பல பகுதிகளில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பின் விவரம் சபாநாயகருக்கு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கு மீதான தீர்ப்பின் விவரம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ், தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை முடிவில், முதலாவது பிரதிவாதியான திரு. பிரேமதாஸா ஜனாதிபதிப் பதவிக்கு முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அடங்கிய பத்திரத்தை உயர்நீதிமன்றப் பதிவாளர் பந்துல அத்தபத்து, நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமது விற்கு அனுப்பி வைத்திருக்கிறார். (உ-எ)

## கடற்படை ரோந்து

தென்மராட்சி, செப், 2

வடமராட்சி கிழக்கு கடல் பகுதியில் கடற்படையின் ரோந்து கடந்த இரு தினங்களாக அதிகரித்துள்ளது கடற்படையின் பாரிய கப்பல் ஒன்றும் இப்பகுதியில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## தமிழகத்தில் 27 ஆயிரம் பேர் நேற்றுக் கைது

தமிழ் நாட்டில் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தனியாரிடம் மீண்டும் ஒப்படைத்ததை ஆட்சேபித்து நேற்று தி. மு. க. மற்றும் எதிர்க்கட்சிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. இதனையொட்டி தமிழ்நாடு முழுவதிலும் நேற்று 27 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். (உ-10)

### ஷெல் தாக்குதல்

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்றுப் பகல் 11 மணியளவில் பொன்னாலை திருவடி நிலைப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாலை 2 மணிக்கு மாதகல் இராணுவ முகாமில் இருந்தும் திருவடிநிலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. (உ-15-28)

## அமைச்சரவையில் மாற்றம்?

கொழும்பு செப் 2

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் வெற்றி பெற்றதை அடுத்து ஜனாதிபதி பிரேமதாஸா தமது அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த உள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தமது நெருங்கிய நண்பர்களிடம் இது குறித்து கருத்து வெளியிடுகையில் தான் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படுவது உறுதி என்று தெரிவித்தாராம். (உ-10)

## தென்பகுதி இளைஞர்கள் படையில் சேர பின்னடிப்பு!

கொழும்பு, செப். 2

தெற்கில் இராணுவத்துக்கு ஆட்சேர்க்க முழு மூச்சில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் அங்கு படையில் சேர இளைஞர்கள் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 15 ஆம் திகதி மாத்தறை இராணுவ முகாமில் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று மாலை வரை இருவர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தார்களாம்!

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்குரிய மருந்தில் அரைவாசி வெட்டு!

யாழ்ப்பாணம், செப் 2

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்து வகைகளில் அரைவாசியே இம்முறை 'குமண'க் கப்பலில் எடுத்து வரப்படும்.

போதனா ஆஸ்பத்திரி நிர்வாகம் தேவையெனக் கேட்ட மருந்து வகைகளில் அரைவாசியை மட்டுமே எடுத்து வர கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியிருக்கிறது.

ஊசி மருந்துகள், காயங்கள் ஆறுவதற்குப் பாவிக்கப்படும் மருந்து வகைகளின் அளவுகளே பெருமளவில் குறைக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. (அ-3)

### தடுப்புக் காவல் கைதிகள்:

## பலாலியிலிருந்து 81 பேர் களுத்துறைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 2

வடபகுதிக் கடலில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தவர்களில் 81 பேர் களுத்துறை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு, அவர்களது உறவினர்கள் எழுதிய கடிதங்களை, கடந்த வாரம் பலாலி சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் தம்முடன் எடுத்துச் சென்ற

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SHAMROCK
யாழ். சுண்டிக்குளி.

A/L 93
Day Classes

ஆரம்பம்:
03-09-92
வியாழன் மு.ப. 8-00

வர்த்தகம் —
திரு. பசில்
பொருளியல் —
திரு. E.பிரபாகரன்
கணக்கியல் —
திரு. சௌந்தி
அளவையியல்/கிறீஸ்தவம்
பிரபல ஆசிரியர்கள்
[22393]

கலை, வர்த்தக
கல்லூரி
C.C.A
O/L 1992 விஞ்ஞானம்
மீட்டல் வினா - விடை
வகுப்பு.
ஆரம்பம்:
05 — 09 — 1992
சனி, ஞாயிறு } மாலை 5மணி.
இரா. செல்வவடிவேல்.
[சி-3197]

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.
A/L 93
கலை, வர்த்தகம்
Day Class
எமது வழமையான
ஆசிரியர் குழுவினால்
ஆரம்பம்: 03-09-1992
வியாழன் 8-00 காலை
[சி-3305]

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்,
(Becon
Study Centre)
A/L 93
மீட்டல் வினா-விடை
வகுப்பு

பொருளியல்
வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்:
05 — 09 — 1992
சனி 1-00 p.m.

★ எமது நிறுவன மாண வர்களுக்கு இவ் வகுப்பு இலவசமானது.
★ ஏனைய மாணவர் களில் ஒரு குறிப்பிட் டளவினரே அனு மதிக்கப்படுவர்.
[சி-3209]

## இரு வாலிபர் கைது

வீட்டில் தனிமையில் இருந்த 35 வயது குடும்பப் பெண் ஒருவரிடம் சேஷ்டை விட்ட இரு வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

உரும்பராய் மேற்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
துரிதமாக ஆங்கிலம்-
பேச, எழுத, வாசிக்க
3 மாத வகுப்புக்கள்
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
BY
எம். ஏ. ஹரி
(B. A. Dip - in - Eng.)
ஆரம்பம்:
02 - 09 - 92
புதன் 4-00 p. m.
[சி-3306]

கேள்விப்பத்திர
அறிவித்தல்

இரண்டாந்தர
(2nd Hand)
ரேடியேற்றர்
கொள்வனவு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு "பேர்கின்ஸ்" மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்குப் பொருத்தக்கூடிய, நல்ல நிலையிலுள்ள ரேடியேற்றர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது.

அண்ணளவான அளவு — 21'' x 18'' x 3''

இதனை வைத்திருப்போர் 1992-09-14 காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகத் தமது கூறுவிலைகளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தேவையேற்படின் அதனை யாழ். பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ரேடியேற்றர் கொள்வனவிற்கான கூறுவிலை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 1992-09-14 அன்று காலை 10-30 மணிக்கு, பல்கலைக்கழகச் சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

— பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
[சி/3218]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 2

மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ ஞானகலா அணி எதிர் கொய்யாத்தோட்டம் அணி.
★ யங் றோயல் அணி எதிர் றோயல் அணி. [த]

## ஆங்கில வகுப்புகள்

1990 - 91 ஆம் கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் வடக்கில் ஆறு நிலையங்களில் நேற்று முதல் ஆரம்பமாகின.

யாழ். இந்து, யாழ். இந்து மகளிர், மானிப்பாய் இந்து, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி, சாவகச்சேரி டிறிபேர்க் ஆகிய கல்லூரிகளிலேயே இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன.

அறிவிக்கப்பட்ட புதிய வெட்டுப்புள்ளி அடிப்படையில், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியுடைய அனைவரையும், தமது வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள மேற்படி நிலையம் ஒன்றில் தமது பெயரைப் பதிவு செய்யுமாறு ஆங்கிலப் பாடத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [உ]

## வள்ளுவர் விழா

உரும்பராய் திருவள்ளுவர் மன்ற ஆதரவில் நாளை தொடக்கம் மூன்று தினங்களுக்கு வள்ளுவர் விழா நடைபெற உள்ளது.

உரும்பராய் இந்துக் கல்லூரி திறந்த வெளி அரங்கில் தினமும் மாலை ஐந்து மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

திருக்குறள் ஆய்வுரை, கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமண்டபம் ஆகியன முக்கிய நிகழ்ச்சிகளாக நடைபெறும்.

சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் மூன்று நாட்களிலும் இடம்பெறும். [ஆ]

## அதிபர்கள் கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களின் கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரசிங்கம் ஞாபகார்த்த நிர்வாகப் பிரிவில் அமைந்துள்ள ஆசிரியர் அறையில் நடைபெறும் என பண்டத்தரிப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு தெரிவித்துள்ளார். [உ]

## ஆய்வுரை

தஞ்சை வேதநாயகர் பற்றிய கருத்தரங்கு நாளை 3 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெயநேசன் தஞ்சை வேதநாயகர் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்துவார்.

கலாநிதி சோ. கிருஸ்ணராஜா கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார்.

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை 6 ஆம் திகதி

யாழ்ப்பாணம், செப். 2

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை இம்மாதம் 6 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணக் கோட்டம், வேலணைக் கோட்டம், மருதனார்மடம் கோட்டம் ஆகியவற்றில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் யாழ். இந்துக் கல்லூரியிலும் —

பருத்தித்துறைக் கோட்டம், சாவகச்சேரிக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம் ஆகியவற்றில் நேர்முகப் பரீட்சைக் [7 ஆம் பக்கம் பார்க்க].

திருக்கல்யாண வரவேற்புபசார அழைப்பு

மணமக்கள்- நித்தியானந்தன்-வசந்தகுமாரி
காலம்- 02 - 09 - 1992 புதன்கிழமை
இடம்- களபாவோடை வசந்தநாகபூசணி அம்பாள் ஆலயம்.
நேரம்- மாலை 2 மணிமுதல் 7 மணிவரை
வரவேற்பு- ஆலய தொண்டர்கள்

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

தங்கள் நல்வரவை நாடும்
அன்னையின் தொண்டர்கள்

ஏழாலை தெற்கு.

குறிப்பு 2 மணிக்கு ஆலய பஜனைப் பாடல்கள், 3 மணிக்கு கலாவினோதன் கலைமாமணி க. சின்னமணியின் "பார்வதி கல்யாணம்" எனும் பொருள்பற்றி வில்லுப்பாட்டு, 5 மணிக்கு சற்குருநாதன் அவர்களின் வயலின்சோலோ கச்சேரி.
(சி-3222)

அறிவித்தல்


பண்டத்தரிப்பு நஷனல் கல்வி நிலைய மாணவ, மாணவிகளின் நலன் கருதி அவர்களுடைய வகுப்புக்கள் சம்பந்தமான கலந்துரையாடல் 03 - 09 - 92 மாலை 3.00 மணியளவில் நடைபெறும். இதில் சகல மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

—S. K. தளையரட்ணம்

டச்சு வீதி,
மூளாய், சுளிபுரம்.
[சி/3221]

ஆண்டுகள் இரண்டாகின...

அன்னை மடியில்! 27 — 07 — 1934



ஆண்டவன் அடியில்; 20 — 08 — 1990

மனவல் டோமினிக் (வாஸ்)

தேன்கூடு உடைந்ததையா
பொன் மேனி காணவில்லையைய்யா
வான் பார்த்த பயிர் போலவைய்யா
வாட்டமுற்று நிற்கின்றோமையா
பெற்றாய் ஐந்து பெண்ணையா
காத்தாய் அன்பாய் தானையா
ஐயா ஐயா எம் ஐயா
எப்போ தான் வருவாயையா?...

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

41, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
[5276]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தயக்கம் காட்டியும் கட்சி என்னை விடவில்லை

# ஜனாதிபதி வேட்பாளராக நிற்குமாறு ஐ.தே.க. என்னைக் கெஞ்சிக் கேட்டது!

## பிரேமதாஸா கூறுகிறார்

கொழும்பு, செப். 2

''1988 ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்கும்படி ஐக்கிய தேசியக்கட்சியே என்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது நான் மறுத்தும் அவர்கள் விடவில்லை. இதில் இருந்து தப்ப முடியாத நிலையில் நான் வேட்பாளர் நியமனத்தை ஏற்றுக் கொண்டேன்.''

ஜனாதிபதி பிரேமதாஸா மாத்தறை மாவட்ட ஐ.தே.க. மாநாட்டில் பேசுகையில் முன் கண்டவாறு கூறினார். கடந்த வார இறுதியில் இந்த மாநாடு நடைபெற்றது.

திரு. பிரேமதாஸா மேலும் சொன்னதாவது:

தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் நியமனம் கோரி கட்சியின் உறுப்பினர்கள் தான் கட்சிக்குப் பின்னால் செல்வார்கள். இதுதான் வழமையாக நடந்து வருகிறது. ஆனால் 1988 ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்கும்படி ஐக்கிய தேசியக்கட்சியே என் பின்னால் வந்தது. நான் தயக்கம் காட்டியும் கட்சி என்னை விடவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் விருப்பம் கொண்ட ஏனையோர், நாட்டில் அப்போது தலைவிரித்தாடிய வன்செயல்களுக்குப் பயந்து போட்டியிட பின் வாங்கினார்கள். நாட்டில் அன்று சகஜ நிலை இருந்திருப்பின் வேட்பாளர் நியமனம் கோரி பலர் முண்டியடித்திருப்பர்; வேட்பாளர் நியமனம் கோரி அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு கடிதங்கள், மகஜர்கள் மற்றும் வேண்டுகோள்களை அவர்கள் அனுப்பி வைத்திருந்திருப்பார்கள்.

தனிப்பட்டவர்களின் பின்னால் ஓடும் ஒரு கட்சியல்ல ஐக்கிய தேசியக்கட்சி. பிரேமதாஸா இல்லாத ஐக்கிய தேசியக்கட்சியையே எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன.

### ஐ.தே.க. தொடர்ந்து பதவியில் நீடிக்கும்

என்னைப் பதவியில் இருந்து அகற்றி விட்டு, தேர்தலில் வெற்றியீட்டலாம் என்று எதிர்க்கட்சிகள் எண்ணுகின்றன.

தற்போதைய பதவிக்காலம் முடிந்த பின்னர் இன்னொரு பதவிக்காலம் ஜனாதிபதியாக நீடிக்க, நான் தேர்தலில் போட்டியிட முடியும்.

அதன் பின்னர் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் பதவியில் நீடிக்கும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்.

எதிரிகளை எப்படி ஒழிப்பது என்பதைத் தெரிந்தவர்கள் சிலர் இருக்கின்றார்கள். மக்களைக் கொல்ல அவர்கள் 'கறுப்புப் பூனை'களைப் பயன்படுத்தினர். இவை எல்லாம் விரைவில் வெளிவரும்.

ஜே.வி.பியினரால் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியினருக்கான சன்மானங்களையும் கூட அவர்கள் பெற்றுள்ளார்கள்.

அவர்கள் தங்களை ஜே.வி.பியினராகக் காட்டிக் கொண்டு, தாங்கள் செய்த 'வேலை'க்காக பணமும் பெற்றுள்ளார்கள்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் நான் ஈடுபட்டுள்ளேன். அதனால் என்னைத் துரத்த அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

ஏழைகளின் நல்வாழ்வுக்காக நான் இரவும் பகலும் உழைத்து வருகின்றேன். ஆனால் அவர்கள் தம்மைப் போன்று நண்பகல் 12 மணிக்கு நானும் நித்திரை விட்டெழுந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

### என்மீது ஆத்திரம்

அவர்கள் கொள்ளையடிப்பதை நான் கண்டும் காணாதது மாதிரி இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். நான் அதனைத் தடுத்தும் அவர்கள் என்மீது ஆத்திரம் கொண்டனர். அவர்கள் முன்னர் என்ன செய்தார்கள் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. அதனால்தான் அவர்களின் அமைச்சுக்களை நான் மாற்றினேன். அவர்களின் நன்மை கருதியே நான் அம் மாற்றத்தைச் செய்தேன். அவர்கள் இருவரும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்கள். அவர்கள் இருவரும் எப்படி கொள்ளையிட்டார்கள் என்பதும் அவர்கள் ''லஞ்சம்'' ['Kickbacks'] மற்றும் 'வெட்டு' ['Cuts'] ஆகியவற்றை எப்படிப் பெற்றார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

அவர்கள் தாங்களாகவே திருந்திக் கொள்வார்கள் என்று நான் எண்ணினேன்.

### திருத்த முயற்சித்தேன்

அவர்களை நான் திருத்த முயற்சித்தபோது அவர்கள் என்னை அகற்ற முயற்சித்தார்கள். முடிவில் அவர்கள் அகற்றப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

''இந்தக் கட்டத்தில் நான் ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகற்றப்பட்டாலும் மக்களின் சொத்துக்களையும் செல்வத்தையும் எவரும் கொள்ளையடிப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்'' —

இவ்வாறு திரு. பிரேமதாஸா சொன்னார். [உ-எ]

## லலித்தை சுகம் விசாரித்தார் ஜே. ஆர்.

கொழும்பு, செப். 2

கடந்த சனிக்கிழமை காலை இரத்மலானைப் பகுதியில் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது மனைவியுடன் சென்று பார்த்தார்.

தாக்குதல் நடத்தப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அன்றைய தினமே ஜெயவர்த்தனா தம்பதிகள் அத்துலத்முதலியின் வீட்டுக்குச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## நயினாதீவில் பொலீஸ் நிலையம்

கொழும்பு, செப். 2

நயினாதீவில் புதிய பொலீஸ் நிலையம் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி திறக்கப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. அதனையடுத்து இளவாலைப் பகுதியிலும் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஊர்காவற்றுறையில் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ)

## கொக்கட்டிச்சோலை படுகொலை:

# ராணுவ நீதிமன்ற விசாரணை மீண்டும் செப். 22ஆம் திகதி

### எதிரிகள் கொழும்பில் தடுத்து வைப்பு

கொழும்பு, செப். 2

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாக 20 இராணுவத்தினர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றம் மீண்டும் இம்மாதம் 22 ஆம் திகதி கூடவிருக்கிறது.

பிரிகேடியர் ஒருவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீதிமன்றத்தில் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர்.

சென்ற மாதம் 10 ஆம் திகதி இந்த நீதிமன்றம் முதல் தடவையாகக் கூடியது அச் சமயம் மூன்று எதிரிகள் சமூகமளிக்கவில்லை. விசாரணையை நடத்துவதற்கு எதிரிகள் தரப்புச் சட்டத்தரணிகளும் தயாராக இருக்கவில்லை. அதனைத் தொடர்ந்து மேல்விசாரணை இம்மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகளான இராணுவத்தினர் அனைவரும் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் 67 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஓ-எ)


புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

Spoken English With Grammar by Britto

ஆரம்பம்: 05 - 09 - 1992 (11 மணி)

[சி-3192]



கொக்குவில் மேற்கு

மஞ்சவனப்பதி முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் 02-09-92 புதன்கிழமை முற்பகல் 11-45 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 11-09-92 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

★ விசேட உற்சவங்கள் ★

| | |
|---|---|
| கொடியேற்றம் | ⟶ 02-09-1992 முற்பகல் 11-45 மணி |
| தண்டாயுதபாணி உற்சவம் | ⟶ 08-09-1992 பிற்பகல் 2-00 மணி |
| சப்பரத்திருவிழா | ⟶ 09-09-1992 மாலை 6-30 மணி |
| தேர்த்திருவிழா | ⟶ 10-09-1992 காலை 9 30 மணி |
| தீர்த்த உற்சவம் | ⟶ 11-09-1992 காலை 10-00 மணி |
| பூங்காவனம் | ⟶ 12-09-1992 மாலை 4-30 மணி |
| அலங்கார உற்சவம் | ⟶ 13-09-1992 மாலை 5-00 மணி |

★ விசேட நிகழ்ச்சிகள் ★

இரவு 8-00 மணி தொடக்கம் 9-00 மணி வரை கம்பன் கழக அமைப்பாளர்

திரு. இ. ஜெயராஜ் அவர்களால்

பெரியபுராண தொடர் விரிவுரை

நிகழ்த்தப்படும்.

— ஆலய தர்மகர்த்தா சபையினர்.

[22391]



உ

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருஷம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (03 - 09 - 1992) குருவாரமும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 40 முதல் 10-52 வரையுள்ள துலா லக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன் ஐயாச்சாமி சர்மாவுக்கு — எமது ஜ்யேஷ்ட புத்திரி மது ஷாலினியை

நல்லூர் சிவன் கோவிலில் வைத்து கன்னிகாதானம் செய்து திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் விவாஹத்தில் குடும்ப சமேதராக வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| சமாவர்த்தனம் | 03 - 09 - 1992 காலை 6 மணி (மணமகன் இல்லம்) |
| வதூவரகிரகப் பிரவேசம் | 03 - 09 - 1992 பிற்பகல் 4 மணி (மணமகன் இல்லம்) |
| வரவேற்பு | 06 - 09 - 1992 பிற்பகல் 3 மணி (மணமகள் இல்லம்) |

இங்ஙனம்;

பிரம்மஸ்ரீ ஐ நாகராக்குருக்கள் குடும்பம், (மாவிட்டபுரம்) முதலியார் வளவு, ஐயனார் விதி, சுன்னாகம்.

பிரம்மஸ்ரீ சு. ஸ்ரீதரக்குருக்கள் குடும்பம், வீரபத்திரர் கோவிலடி, நீர்வேலி தெற்கு.

★ தனிப்பட்ட அழைப்பு இல்லை ★

[4960]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மேசைகள், வாங்குகள், சுந்தோர் வாங்குகள், இலாச்சி மேசைகள், வீட்டுச் சோகேஸ், கடைச் சோகேஸ், அலுமாரிகள், ஜன்னல், கதவுகள், இரும்புக் கதவுகள் (கேற்) விற்பனைக்குண்டு: தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (22332)

## மலிவு விற்பனை

மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி, புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. றோணியோ, குறித்த தவணையில் தரமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம். [சி-3181]

## நல்லினத் தோடை

விளாத்தியில் ஒட்டிய, ஒரு வருடத்தில் பலன் தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் விற்பனைக்குண்டு. இடம்; துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர் அல்லது இங்கிலீஸ் பார்மஸி, உரும்பராய். [5198]

## கோழிக் குஞ்சுகள் விநியோகம்

வெள்ளை பிறவுன் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. சிங்கம் வீதி, உடுவில் [உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்], மல்வம் வீதியூடாக முதல் வலது பக்கம் திரும்பும் சிங்கம் வீதி. [4961]

## புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes. 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்! சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், இல. 284, ஸ்ரான்லி வீதி, [பழைய விகாரை முன்பாக] யாழ்ப்பாணம். [22345]

## எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரி வினாத்தாள் [பொது விவேகப் பயிற்சிகள்] 10-9-92 வெளிவருகின்றது. ஆக்கம்: க. குணராஜா. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22308]

## புவியியல் A/L

படவேலை [1:50 000] நில வுருவங்கள், கால நிலையியல், தேசப் படத் தொகுதி [அற்லஸ்] ஆகிய பாட நூல்களின் புதிய பதிப்புகள் வெளிவந்துள்ளன. ஆக்கம்: க. குணராஜா (எம்.ஏ). எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22309]

## தேவை

வேப்பம் விதை தேவை. அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-3215]

## மணமகன் தேவை

இந்து, [பூசம் நட்சத்திரம், உதயச் செவ்வாயை வியாழன் 5ஆம் பார்வையாகப் பார்க்கிறது, கிரகபாவம் 60] Draughtsman சித்தியடைந்து Quantity Surveyக்குப் படிக்கும் 26 வயதுப் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [22385]

## மணப்பெண்கள் தேவை

கனடாவில் இருந்து வந்து செய்யும் கத்தோலிக்க 36, 34, 32 வயது மணமக்களுக்கு பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [22386]

## துர்க்கா திருமண சேவை

31-8 92 தொடக்கம் துர்க்கா திருமண சேவை. சிவசக்தி ஸ்ரோர்ஸ் இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். [4954]

## இலவச திருமண சேவை

வயது 31, கிறிஸ்தவ (Non R/C) தனியார் துறை உத்தியோக மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. சகல தரங்களிலும் மணமக்கள் உண்டு. நாடுங்கள் ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [1776]

## வெள்ளி மகா தெசை

ஜனாதிபதித் தேர்தல் வழக்குத் தீர்ப்புப் பாதிக்காது. மீண்டும் தேர்தல் ஏற்படினும் பிரேமதாசாவை வெள்ளி மகாதெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். 05-03-93 முதல் ஏழரைச் சனி நடுக்கூறும், அட்டமத்து வியாழனும் கூடுவதால் அரசியல் நெருக்கடிகளால் மாரகத்தை உண்டாக்கும் வியாழ மாற்றம் விற்பனையாகின்றது. சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (Prof: சத்தியதாஸன்) [4959]

## தவறிவிட்டது

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 27 - 08 - 1992இல் 143590593V இலக்க அடையாள அட்டை, வேறு முக்கிய ஆவணங்களுடன் எனது காசுப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நீ. அ. இம்மனுவேல், இல. 14A, விதானையார் வீதி, சுண்டிக்குளி [22389]

## பிரயோக கணிதம் A/L

'நிலையியல் பகுதி 1', 'காவியும் அதன் பிரயோகங்களும்' ஆகிய பயிற்சி நூல்களும், பிரயோக கணிதம் மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் ஆகிய நூலும் தமிழீழமெங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர்: திரு. சி. துரையப்பா, B.Sc. (சிறப்பு), M.Sc, [Eng.] [5285]

## PERSONAL CLASSES

G. C. E. [O/L] 92 கணித வகுப்புகள் அடிப்படையில் இருந்து பாடத்திட்டம் முழுவதையும் அரித முறையில் பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் சித்திக்கு உத்தரவாதமளித்து கற்பிக்கப்படும். வாரந்தோறும் பயிற்சிப் பரீட்சை, ஏனைய வகுப்புகளுக்கும் கணிதம் கற்பிக்கப்படும் Kana. Pararasasekaran, No. 8. Fletchers Lane, Chundikuli, Jaffna. [22390]

---

யாழ்ப்பாண

மாநகராட்சி மன்றம்

### வேலைப்பகுதி தொழிலாளர்/ பொதுத்தொழிலாளர் (அமைய)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

தகைமைகள்:

01. கல்வி: 5ஆம் வகுப்பில் சித்தி.
02. வயது: 18வயது தொடக்கம் 40வயது வரை.
03. யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 05-09-1992ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் உள்ள மாநகர சபை மராமத்து பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31-08-1992. [சி-3217]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நடராசா கந்தசாமி

அமரர் நடராசா கந்தசாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அவரது சொந்த இடமான தொண்டமனாறு செல்வச்சந்நிதி மணியம் மடத்தில் 03 - 09 - 1992 இல் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

தொண்டமனாறு,
செல்வச் சந்நிதி,
மணியம்மடம். [5288]

---

# கம்பியூட்டர் கல்வி




- BASIC
- PASCAL
- d BASE III +
- LOTUS 1-2-3
- WORD STAR 5 5

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

07 — 09 — 1992 WEEK DAY
06 — 09 — 1992 WEEK END

மேலதிக விவரங்களுக்கு:

### யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]

வடமராட்சி: 'சதா பொலிஸ்', அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தென்மராட்சி: சயன்ஸ் சென்ரர், மடத்தடி, சாவகச்சேரி.


[சி 3177]

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18 07 1966

மறைவு: 16 09 1991



### வீரவேங்கை டொறின்

(தவராணி யோககுரு)

திதி: 04-09-1992

பாசமுடன் நாம் வளர்த்த தவமகள், தன்னை நேசமுடன் இணைத்துக் கொண்டவள், தானைத் தலைவன் தம்பி பிரபாவின் வீரப் புலிப்படையில் ஏகினாள்

வீரசுவர்க்கம் மணலாறு மீட்புப் போரிலே.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான வீட்டுக்கிரியை எதிர்வரும் 04-09-1992 அன்று நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

\- பெற்றோர்.

கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை. [22377]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேச்சுகள் நடத்திய அரசின் அணுகு முறையே சிறந்தது

## கொழும்புக் கருத்தரங்கில் ஹமீத்

'சமஷ்டி அரசமைப்பு, அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாண சபைகள்: ஒரு மீளாய்வு' என்ற தலைப்பில் லிபரல் ஜனநாயகக் கவுன்ஸில் சமீபத்தில் முழுநாள் கருத்தரங்கு ஒன்றை கொழும்பில் நடத்தியது.
உயர்கல்வி மற்றும் நீதித்துறை அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் இக் கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரை ஆற்றினார். அவரின் உரையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது அனுபவித்து வரும் பிரச்சினை புதுமையான ஒன்றல்ல. உலகின் பல பகுதிகளிலும் இது போன்ற பிரச்சினைகள் நிலவுகின்றன. சிறுபான்மை இனங்களின் கவலைகள் புறக்கணிக்கப்பட்டு வந்தமையே இப்பிரச்சினைகள் தோன்றக் காரணம்.

முதலாம் உலக மகாயுத்தத்துக்குப் பின்னர் அமைக்கப்பட்ட 'லீக் ஒப் நேஷன்ஸ்' அமைப்பு சிறுபான்மைச் சமூகங்களின் நலன்கள் குறித்து உணர்ச்சிவசப்பட்டிருந்தது. யுத்தத்துக்குப் பின்னர் மனித உரிமைகள் வலியுறுத்தப்பட்டன.

தேசம் என்றால் அது அத் தேசத்திலுள்ள பெரும்பான்மைச் சமூகத்துடன் சமமாகக் கருதப்பட்டது. இதனால் கலாசார ரீதியிலான சிறுபான்மையினர் 'தேசியமயப்' படுத்தப்பட்டனர். இது பொருளாதார ரீதியிலான தேசியமயப்படுத்தலுடன் சமாந்தரமாக இடம்பெற்று வந்தது. பொருளாதாரத்துறையில் தேசிய மயப்படுத்தல் முறையை ஒழிக்கும்படி (de- nationalization) உலக வங்கி வற்புறுத்தி வருகின்றது.

ஆனால் ஒரு தேசத்தின் பெரும்பான்மைச் சமூகத்துடன் சிறுபான்மையினர் 'தேசியமயப்படுத்தப்பட்டு' வருவது ஒழிக்கப்பட வேண்டும் என்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை பேசுவதில்லை. இது வருத்தத்திற்கு உரியது. எல்லா சிறுபான்மைச் சமூகங்களும் தங்களுடைய தனித்தன்மையை, தங்களுடைய மூலவேரை பத்திரப்படுத்திக் கொள்ள விரும்புகின்றன.

### 1972 குடியரசு அரசமைப்பு

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1971 இல் இரண்டாவது சபை (செனட்) ஒழிக்கப்பட்டது. 1972 இல் கொண்டு வரப்பட்ட குடியரசு அரசமைப்பு சிங்களம் மட்டும் சட்டத்தை பீடத்தில் வைத்தது. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்கிவந்த 29ஆவது ஷரத்தை 1972 குடியரசு அரசமைப்பு நீக்கியது.

1978 அரசமைப்பு ஒற்றை, இரட்டை நாடாளுமன்றத் தொகுதி முறையை ஒழித்தது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அது அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து விருப்பு வாக்கு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகளினால் தேசிய பெரும்பான்மைச் சமூகத்தில் வைத்திருந்த தமது நம்பிக்கையை சிறுபான்மைச் சமூகங்கள் கைவிட வேண்டியதாயிற்று.

இந்த நிலையை மாற்றி அமைக்க 1978இல் இருந்து சில சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. நாடற்றவர்களுக்கு பிரசா உரிமை வழங்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் சட்டபூர்வமாக்கப்பட்டன. தமிழ், உத்தியோக மொழி ஆக்கப்பட்டது.

### 6 ஆவது அரசமைப்பு திருத்தம்

1983 இனக்கலவரத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆறாவது அரசமைப்புத் திருத்தம் இன உறவை மிக மோசமாகப் பாதித்தது. 6ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நான் எதிர்த்தேன் அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்ததினால் அதன் யதார்த்தம், பலன், எதிர் விளைவு ஆகியவற்றை நான் கவனித்தேன்;

"6ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் இருந்து தமிழ் எம்.பிக்களை அரத்திவிடும் என்றும்—

அரசாங்கம் பேச்சு நடத்த தமிழ் எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும் —

தமிழ் எம். பிக்களைத் துரத்தி விட்டால் பின்னர் அவர்களுடன் வேறு ஆட்கள் மூலம்தான் பேச வேண்டும் என்றும் — நான் அமைச்சரவைக் கூட்டத்தில் அப்போது தெரிவித்தேன்.

எனது எச்சரிக்கை காதில் ஏறவில்லை. பின்னர் மற்றவர்கள் மூலமாக தமிழ் எம்.பிக்களுடன் பேசினோம்.

### சர்வகட்சி மாநாடு

1984இல் சர்வகட்சி மாநாடு 6 மாதங்களாக நடந்தது. பெரும்பாலான விஷயங்களில் இணக்கம் காணப்பட்டது. தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்றுக் கொண்டது. இரு மாகாணங்களுக்கும் தனித்தனி பிராந்திய சபைகளும் இணைப்புக் கவுன்ஸில் ஒன்றும் அமைப்பது பற்றி பேச்சு நடத்தப்பட்டது. ஓர் உடன்பாடு காணும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அந்தச் சந்தர்ப்பம் தவறிப் போய் விட்டது. அது துக்ககரமானது. அதன் துக்ககரமான விளைவுகளை இலங்கை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

### சந்தர்ப்பம் நழுவியது

1984 நவம்பரில் பெங்களூரில் சார்க் மாநாடு நடந்த சமயம்கிடைத்தஅரிய சந்தர்ப்பம் ஒன்றும் தவறியது. அருகில் இருந்த அறையில் எம். ஜி, இராமச்சந்திரனும், பிரபாகரனும் இருந்தனர். ஆனால் சந்திப்பு இடம் பெறவில்லை

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தியதை இன்னும் நான் ஆதரிக்கின்றேன். ஜனநாயக தேசிய நீரோட்டத்துக்கு அவர்களைக் கொண்டு வரும் முயற்சியே அது. தவறுகள் செய்யப்பட்டுள்ளன. சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டுள்ளன.

கேள்வி தீர்வு காண்பதே தீர்வு கட்டாயமாகக் காணப் படவேண்டும்; தீர்வு காணப் படாவிட்டால் எதிர்காலம் இருண்டு காணப்படும்;

### சாத்தியமான மூன்று தீர்வுகள்

மூன்று சாத்தியமான தீர்வுகள் என் மனதில் வருகின்றன.

ஒன்று — சமஷ்டி அரசமைப்பு. இதனைக் கொண்டு வர அரசமைப்பு திருத்தப்பட வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும்.

இரண்டாவது - மூன்று பட்டியல்கள் முறை நீக்கப்பட வேண்டும்: அவையாவன - மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மற்றும் அதிகாரங்கள், மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் மற்றும் அதிகாரங்கள், பொதுவான விஷயங்கள். அதிகாரங்கள் இவற்றுக்குப் பதில் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்கள் அடங்கிய ஒரு பட்டியல் கொண்டுவரப்படவேண்டும். இதனைச் செய்வதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள் இன்னும் சிலர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன். சர்வசன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

மூன்றாவது மாற்றுவழி - கூடுதலான நிறைவேற்று அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதேயாகும். இதனால் மத்தியில் உள்ள நிறைவேற்று அதிகாரி (Executive) வெறும் சம்பிரதாயபூர்வமான ஒருவராக மாறுவார்.

### எந்த ஒரு தீர்வுக்கும் மக்கள் ஆதரவு தேவை

எந்த வகையான தீர்வு கண்டாலும் மக்களின் ஆதரவு அதற்குத் தேவை. மக்களின் கருத்திணக்கம் இதற்காக உருவாக்கப்பட வேண்டும். அப்படியான கருத்துடன்பாடு ஒன்றை மக்கள் மத்தியில் உருவாக்கும் பொறுப்பு அரசியல் கட்சிகளையும் நல்லெண்ணம் கொண்டுள்ளவர்களையும் சார்ந்துள்ளது.

மக்கள் விரும்புவது தீர்வையே. இரத்த ஆறு ஓடுவதற்கு முடிவுகட்டப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.

### சிறந்த அணுகுமுறை

"14 மாதங்களாக விடுதலைப் புலிகளுடன் நான் பேச்சு நடத்தினேன்: நான் பேச்சு நடத்தியது சரியானது தான் என்பதில் இன்னும் உறுதியாக நான் இருக்கின்றேன். நான் கடைப்பிடித்த அணுகுமுறைதான் சிறந்தது; அப்பேச்சுகளின் போது நம்பிக்கையைக் கட்டி எழுப்ப நான் ஆரம்பித்தேன். விடுதலைப் புலிகளை மாகாண சபை முறையை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு நான் முயற்சித்தேன்.

அப்பேச்சுகளின் போது ஆயுதங்கள் கையளிக்கப்படுவது தான் பிரச்சினையாக இருந்தது. ஜனநாயக முறைக்கு அவர்கள் சம்மதித்தார்கள். கொழும்பில் அரசாங்கம் மாறினால் பொஸ்னியா அல்லது தென் ஆபிரிக்காவில் இடம்பெறுவதுபோன்று அவர்கள் மீண்டும் ஆயுதங்களைத் தாக்க வேண்டி இருந்திருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள்.

(இ-எ)


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
A/L 93 கலை, வர்த்தகம்
Day Classes 8-00—2-00
புதிய பிரிவுகள்
ஆரம்பம்; 03-09-1992 (வியாழன்)
பொருளியல்: திரு. கலாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 8-00 — 9-30
,, II வினா-விடை 9-30 — 11-00
கணக்கியல்: திரு. பிரபாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 11-00 — 12-30
,, II வினா-விடை 12-30 — 2-00
வர்த்தகம்: திரு. இரகுநாதன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 12-30 — 2-00
,, II வினா-விடை 11-00 — 12-30
அளவையியல்; திரு. A. பிரபாகரன்
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 9-30 — 11-00
,, II வினா-விடை 8-00 — 9-30
Evening Classes (செவ், வியாழன்)
இந்து நாகரிகம்: காரைசுந்தரம்பிள்ளை
வினா-விடை 3-00 — 4-00
தமிழ்: திரு. குழந்தை
வினா-விடை 4-00 — 5-00
குறிப்பு: எமது மாணவர்களின் பெறுபேறுகளே எமது உத்தர வாதம்.
(இ-3187)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம
MATHAN GOLD WORK SHOP
புதிய டிசைன்களில்
சங்கீதா வளையல்கள்
செய்யவும் உடனுக்குடன் அடித்தும்
பெற்றுக்கொள்ளவும்
★ மதன் தங்கத் தொழிற்சாலை ★
301, கஸ்தூரியார் வீதி,
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
K. ஞானசேகர்
(22368)



மொடேண் எடியுக்கேஷன் சென்ரர்
(கரவெட்டி)
A/L 93
துரித மீட்டல் வினா-விடை வகுப்புகள்
01 09-1992 இல் ஆரம்பமாகிவிட்டன.

| பாடங்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. சரவணபவன் |
| வர்த்தகவியல்: | — | |
| அளவையியல்: | — | திரு. விக்கி |
| இந்துநாகரிகம்: | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ்: | — | திரு: நடராஜா |

நேரம்: காலை 8-00 மணி.
-நிர்வாகி.
(சி-3216)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# செல்லப்பா களஞ்சியம் கடை திறப்பு விழா

## ★ அழைப்பு ★

இதுவரை காலமும் காரைநகரில் இயங்கிய எமது ஸ்தாபனமாகிய செல்லப்பா ஸ்ரோர்ஸ் என்னும் வியாபார ஸ்தாபனம், யாழ்ப்பாணம் (பஸ்நிலையம் முன்பாக) ஆஸ்பத்திரி வீதியில் செல்லப்பா களஞ்சியம் என்னும் பெயர் மாற்றத்துடன் ஆவணி 17ஆம் நாள் (02-09-92) புதன்கிழமை (அதாவது இன்று) காலை 6 மணி தொடக்கம் 7-30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு கேட்டு, தங்கள் நல்வரவை நாடும்!

வேலுப்பிள்ளை சிற்சபேசன்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

(5291)

---

# NEW SCIENCE ACADEMY

Jaffna.

## 93 A/L
## Day Classes

★ துரித மீட்டல் வகுப்புகள் ★

01-09-1992 முதல் ஆரம்பமாகிவிட்டன

PHYSICS — கணேசன்
CHEMISTRY — சண்
BOTANY — குணசீலன்
ZOOLOGY — பிரபல ஆசிரியர்
PURE / APP MATHS — வெக்டர்

குறிப்பு:- பிரிவு I இற்கு 03-09-92க்கு முன்னதாக அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

[சி-3303]

---

# கலை, வர்த்தக கல்லூரி

## C. C. A. யாழ்ப்பாணம்.

## A/L 93
## DAY CLASSES

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
அளவையியல் — திரு. சயந்தன்
இந்து நாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்

பாட அலகும் பயிற்சி வகுப்பும்

| நேரம் | செவ். | வியா. | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|
| 8 — 9 | Eco | Eco | Acc | Acc. |
| 9 — 10 | Com | Com | Hin | Hin. |
| 10 — 11 | Acc | Acc | Com | Com |
| 11 — 12 | Acc. | Acc. | Eco | Eco. |
| 12 — 1 | Eco. | Eco | Log | Log. |
| 1 — 2 | Com. | Com | Hin | Hin. |

ஆரம்பம்: 03 - 09 - 1992 (8 மணி)

குறிப்பு:
- ★ வாரத்தில் 6 மணித்தியாலம் வகுப்புகள் நடைபெறும்.
- ★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்.
- ★ சனி, ஞாயிறு வினா-விடை வகுப்புகள்

[சி-3175]

---

# BECON
## Study Centre

யாழ்ப்பாணம்.

*Spoken English*

(WITH GRAMMAR)

Mon, Wed, Fri.
8-30—9-30 a.m.

By
R. Sivalingam

ஆரம்பம்: 04-09-92
வெள்ளி 8 30 a. m.

[சி-3307]

---

# SPECIAL ENGLISH

உயர்கல்வியைத் தொடரவும், ஆங்கில மொழியில் பூரண அறிவைப் பெறவும், ஒருங்கிணைந்த கற்கை நெறி

ஆரம்பம்: 06-09-1992
Sun. 10-00 a. m.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விபரங்களுக்கு:
நிர்வாகி:
NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

[சி-3200]

---

உ
கணபதி துணை

# திருமண அழைப்பு

பேரன்புமிக்குடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஆங்கிரச ஹு ஆவணி மாதம் 18ஆம் நாள் (03-09-1992) வியாழக்கிழமை அனுஷம் நக்ஷத்திரமும் சுக்கிரஹோரையும் கூடியதாக முற்பகல் 9-33 மணி தொடக்கம் 10-15 வரையுமுள்ள

★ துலாலக்கின சுபமுகூர்த்தத்தில் ★

ஸ்ரீமான் ஆ. பொன்னையா
தம்பதிகளின்
ஏக புத்திரன்
**சர்வேஸ்வரன்**
அவர்களுக்கு

சிவஸ்ரீ வே. இராமலிங்கக் குருக்கள்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
**புஸ்பேஸ்வரி**
அவர்களை

திருமாங்கல்ய பாணிக் கிரகணஞ் செய்து கொள்ள ஸ்ரீ முருகன் திருவருட் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயித்து மேற்படி முகூர்த்தம் மணமகன் இல்லத்தில் நடைபெறுவதால், அன்பர்கள், நண்பர்கள், சுற்றத்தார், அனைவரும் குடும்ப சகிதம் முகூர்த்த வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 06-09-1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் மணமகள் இல்லத்தில் வரவேற்பு விருந்துபசாரம் நடைபெறும். இவ்வறிவித்தலை ஏற்று அனைவரும் வருகை தருக.

(ஸ்ரீ அம்பலவாணர் பொன்னையா),
திருமதி வள்ளிகாந்தி,
மணமகனின் பெற்றோர்,
குளத்தடிப்பிள்ளையார் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

சிவஸ்ரீ வே. இராமலிங்க குருக்கள்,
(புவனேஸ்வரி),
சாஸ்திரியார் மடம்,
துணவி,
வட்டுக்கோட்டை.

[5290]

---

உ
சிவமயம்

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருஷம் ஆவணித்திங்கள் 18 ஆம் நாள் (03-09-1992) வியாழக்கிழமை மாலை 5-47 மணி முதல் 7-20 மணி வரையுள்ள விசாக நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி வைத்தியலிங்கம்
(இளைப்பாறிய அதிபர்)
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீ இராஜவரோதயன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி கதிர்காமத்தம்பி
அவர்களின் புதல்வி
திருநிறை செல்வி
**காஞ்சனா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசிர்வதித்து சிறப்பித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்:-
WESTEN SCHUTZEN HOF.
WILHELM STREET 150 4700 - HAMM - 1,
T. P. 02381 / 441290

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்;

திரு. திருமதி கதிர்காமத்தம்பி தம்பதிகள்.
திரு திருமதி க. வைத்தியலிங்கம் தம்பதிகள் திரு. திருமதி சற்குணசிங்கம் தம்பதிகள்.
திரு திருமதி ஸ்ரீஸ்கந்தவரோதயன் தம்பதிகள். திரு. திருமதி பகீரதன் தம்பதிகள்.
"ஸ்ரீவாசம்", கோண்டாவில் மேற்கு. "அன்னை இல்லம்", குரும்பசிட்டி.

[சி-3219]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# துணிவு வருமா?

தென்னிலங்கையில் மிகவும் பரபரப்புடனும் ஆவலுடனும் எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப வழக்கு, எதிர்பார்க்கப்பட்டது போலவே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஜனாதிபதி பிரேமதாசாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அமைந்துள்ளது.

ஆகையால் தென்னிலங்கை அரசியலில் உடனடியாகப் பெரும் மாற்றங்கள் எதுவும் நிகழும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் தமக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதே என்பதற்காக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் மக்களை வன்செயல்களில் ஈடுபடத் தூண்டும் சாத்தியம் இல்லாமற் போய்விட்டது என்று சொல்வதற்கில்லை.

எதிர்க்கட்சியினர் வன்செயல்களைத் தூண்டினாலும் கூட, அரசு அவற்றை அடக்கிவிடக் கூடிய சக்தி உள்ளது என்பது ஏற்கனவே கண்ட அனுபவம். பெரும் கலவரம் ஒன்றை உருவாக்கி அரசின் ஸ்திரநிலையை ஆட்டம் காணச் செய்யக்கூடிய அல்லது தகர்க்கக் கூடிய ஒற்றுமை எதிரணிக் கட்சிகளிடையே பெரிதாக இல்லை என்பதும் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. பிரேமதாசா சர்வாதிகாரப் போக்குடன், தமது தனிப்பட்ட எண்ணப்படியே ஆட்சி நடத்துகிறார் என்பதும் தமது செல்வாக்கையும் பெயரையும் 'இமேஜை'யும் வளர்ப்பதற்காக அரச பணத்தை வீணாகச் செலவிடுகிறார் என்பதும், மக்கள் மீது வேண்டாத சுமைகளை ஏற்றி மக்களின் வாழ்க்கை நிலையைக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்கிறார் என்பதும் எதிர்க்கட்சியினர் சுமத்தும் குற்றச்சாட்டுக்களாகும்.

இந்தக் குற்றச்சாட்டுகளை மையமாக வைத்து அரசுக்கு விரோதமான பெரிய எதிர்ப்பியக்கத்தை நடத்தக் கூடிய அளவுக்கு மக்கள் ஆதரவைப் பெறமுடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

தேர்தல் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புத் தம்மை தமது பதவியில் மேலும் ஸ்திரப்படுத்துவதாக ஜனாதிபதி பிரேமதாசா கருதுவார் என்பது திண்ணம். அதன் விளைவாக அவர் திடீர் தேர்தல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தெற்கில் தேர்தல் நடத்துவதைவிட, வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அவர் முதலிடம் கொடுப்பாரா என்பதே முக்கிய கேள்வியாகும்.

தமது பதவியை முழுக் காலத்துக்கும் பூரணமாக அனுபவிக்கவோ அல்லது புதிதாகப் பதவிக்கு வருவதற்கோ தமிழர் பிரச்சினையை இழுத்தடிப்பதே சிறந்த மார்க்கம் என்று பிரேமதாசா தொடர்ந்தும் நினைப்பாராகில் அது தப்புக் கணக்காக முடியும் என்பதை இவ்வேளையில் ஞாபகப்படுத்த விரும்புகிறோம்,

தமது பதவி ஸ்திரமாகிவிட்டதால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் துணிவு அவருக்கு வரவேண்டும். வருமா?

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், செப். 2

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழாக் காலங்களில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் "பெரிய புராண தொடர் விரிவுரை" நிகழ்த்துவார்.

★ ★ ★

சாவகச்சேரி செருக்கற் பிள்ளையார் ஆலயம், நுணாவில் மணங்குணாய்ப் பிள்ளையார் ஆலயம், தம்பசிட்டி மாயக்கையம்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதி பிள்ளையார் கோவில், சங்குவேலி ஸ்ரீ சிவஞான விநாயகர் ஆகியவற்றின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்' எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [த-117,31,165]

★ ★ ★

தென்மராட்சி, செப். 2

மிருசுவில் கெற்பலி ஸ்ரீ பரமசிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகத்தை யொட்டி விஷேட நிகழ்ச்சியாக இன்று மாலை 6 மணி தொடக்கம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி வரை பெரிய மாவடி திருநீலகண்ட இளைஞர் சைவ அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலுள்ள பிரார்த்தனைக் குழுக்களின் பஜனையும் தொடர்ச்சியாக நடைபெறும். [அ-117]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 2

இணுவில் மேற்கு வட்டுவினிபதி அருள்மிகு அன்னை பரமேஸ்வரி ஆலய உற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

அதனையொட்டி இன்று தொடக்கம் இம்மாதம் 11 ஆம் திகதிவரை மாலையில் பெரிய புராண விரிவுரை நடைபெறவுள்ளது. காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் இத் தொடர் விரிவுரையை நிகழ்த்துவார். [அ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 2

ஆனையிறவு தட்டுவன்கொட்டி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான லெப்டினன்ட் அன்பழகன் (கந்தையா சசிகுமார் - கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். [உ-3]

★ ★ ★

திருகோணமலை கும்புறுப்பிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் திடீர் மோதல் இடம்பெற்றது. சில நிமிட நேரம் நீடித்த இந்த மோதலையடுத்து இழப்புக்களுடன் படையினர் முகாமுக்கு திரும்பினர்.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான அறிவுமணி அல்லது பிரசன்னா (நமசிவாயம் காசிராசா - தம்பலகமம்) வீரமரணமடைந்தார். [உ-3]

## பாதிப்புற்ற பகுதிகளின்

# பாடசாலைகள் இயங்க மாற்று ஏற்பாடுகள்

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இயங்க முடியாமல் போயிருக்கும் பாடசாலைகளை இயங்க வைக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன்படி இயங்கமுடியாதிருக்கும் பாடசாலைகள் தற்காலிகமாக வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, அங்கு மாலைநேரப் பாடசாலைகளாக இயங்கும். இடம்மாற்றம் பற்றிய விவரம் வருமாறு:-

★ இளவாலைக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அதன் கொத்தணிப் பாடசாலைகளிலும் — (இந்த மாற்றம் மானிப்பாய் இந்துக் கல்லூரி இயங்க ஆரம்பிக்கும் போது அமுலாகும்.)

★ அளவெட்டி கொத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் யூனியன் கல்லூரியிலும் அதன் கொத்தணிப் பாடசாலைகளிலும் —

★ அம்பனைக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் மல்லாகம் மகாவித்தியாலய கொத்தணிப் பாடசாலைகளிலும்—

★ பண்டத்தரிப்புக் கொத்தணிப் பாடசாலைகள் அனைத்தும் வட்டு இந்துக் கல்லூரியிலும் அதன் கொத்தணிப் பாடசாலைகளிலும்—

★ சில்லாலை றோ. க. பாடசாலை மானிப்பாய் புனித ஆன்ஸ் றோ. க. பாடசாலையிலும் —

★ வீமன்காமம் ம. வி., பொன். பரமானந்த வித்தியாசாலை ஆகியவை யூனியன் கல்லூரியிலும்— தற்காலிகமாக இயங்கும் என யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். [உ]

# ஆஸி 2 ஆவது இன்னிங்ஸ்: 5 விக்கெட் இழப்புக்கு 206

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று ஆட்ட வேளை முடிவுற்றபோது ஆஸி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ஓட்டங்களை எடுத்திருந்தது.

முன்னதாக இலங்கை 9 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்கள் எடுத்ததுடன் தனது முதல் இன்னிங்ஸை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது.

ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கை 247 என்பது தெரிந்ததே.

இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். [உ-10]

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். பல்கலைக்கழக 12 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா விழாவுக்கு தலைமை வகிப்பார்.

பட்டமளிப்பு இரு அமர்வுகளாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாவது அமர்வில் கலைமாணி, சித்த மருத்துவசத்திர சிகிச்சைமாணி, இசைக்கலைமாணிப்பட்டமளிப்பும் —

இரண்டாவது அமர்வில் மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி, விஞ்ஞானமாணி, வர்த்தகமாணி, தொழில் நிர்வாகமாணி பட்டமளிப்பும் இடம்பெறும்.

ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் திறமைமிக்க மாணவர்களுக்கு பரிசில்கள், புலமைப் பரிசில்கள் என்பன வழங்கப்படும்.

இவ்வாண்டும் முதல் நிலைப் பட்டங்களுடன் கலாநிதி, முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி முதுமெய்யியலமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதலிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இப்பட்டங்களை, இப் பல்கலைக்கழகத்தில் பயின்ற 610 மாணவர்கள் பெறுகின்றார்கள்.

இப்பட்டமளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து 6 ஆம் திகதி இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும், 7 ஆம் 8 ஆம் திகதிகளில் சீமாட்டி லீலாவதி இராமநாதன், சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரைகளும் இடம்பெறும். [இ]

### பகுதிநேர...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குத் தோற்றியோர் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் இவ் எழுத்துப் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சார்த்திகள் அனைவரும் தங்களுக்குரிய சுட்டெண்களை முறையே யாழ். இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் எழுது கருவிகள், எழுதும் தாள் முதலியவற்றுடன் சமுகமளிக்க வேண்டும் என்றும், எழுதும் தாள் எக்காரணம் கொண்டும் கொடுக்கப்படமாட்டாது என்றும் ஆங்கில பாடத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராஜா அறிவித்துள்ளார். [இ]

## செயன்முறை பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 2

1991 ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின், மனைப்பொருளியில் பாடத்துக்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றாத — தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளுக்கான — விசேட செயன்முறைப் பரீட்சை ஒன்று இறுதித் தினமான நாளை மறுதினம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும். யாழ். கல்விப் பணிப்பாளர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

### சாய்ந்தமருது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

காயமுற்றோரை இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொழும்புக்குக் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நிலைமையை நேரில் கண்டறிய அமைச்சர்கள் ஏ. ஆர். மன்சூர், பி. தயாரத்ன, எம். ஏ. அப்துல் மஜீத், ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் ஆகியோர் நேற்றுமாலை கொழும்பிலிருந்து சாய்ந்தமருதுக்கு புறப்பட்டுச்சென்றனர்.

கடந்த மூன்று தினங்களுக்குள் கிழக்கில் இடம்பெற்ற இரண்டாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிறன்று திருகோணமலை நகர மத்தியில்— பஸ் நிலையத்தில் — இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒன்பதுக்கும் அதிகமனோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. [உ-எ-10]

### தென்பகுதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனால் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு வந்திருந்த அதிகாரிகள் வெறுமனே காத்திருந்துவிட்டு— வந்த இருவரையும் கூட திருப்பி அனுப்பி விட்டு— திரும்பினார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-10]

### பட்டாசுச்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அனுமதி பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் நீதிமன்ற வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஹல்ஸ்டோர்ப்பில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தொகுதியில் 301 ஆம் இலக்கக் கட்டடத்தில் நேற்று தீர்ப்பு வாசிக்கப்பட்ட போது மனுதாரரான சிறிமாவோ பண்டாரநாயக்காவோ அல்லது எதிர்மனுதாரரான ஜனாதிபதி பிரேமதாஸாவோ நீதிமன்றத்திற்கு வந்திருக்கவில்லை.

ஆனால் அமைச்சர்களான ரணில் விக்கிரமசிங்க, ஏ. ஆர். மன்சூர் ஹரோல்ட்ஹேரத், சிறிசேன கூரே ஆகியோரும் மற்றும் பல அரசாங்க, எதிர்த்தரப்பு எம். பிக்களும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் நீதிமன்றக் கட்டடத்தை விட்டு வெளியே வந்த நீதியரசர்களை அரச ஆதரவாளர்கள் சூழ்ந்து கொண்டு அவர்களை வாழ்த்திக் கோஷமிட்டனர்.

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த ரூபவாஹினி, வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதற்காக ஆட்டத்தின் ஒளிபரப்பைச் சற்று நேரம் இடைநிறுத்தியது.

இதனிடையே—

சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு தெரிவிக்கும் போஸ்டர் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியிட்டது.

"நாட்டின் வீரப்பெண்மணியே! மக்கள் உங்கள் பக்கம் — என்ற வாசகங்கள் அந்தப் போஸ்டரில் காணப்பட்டன. [உ-எ-த-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்த மகரிஷி ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், செப். 2

திவ்விய ஜீவன சங்கத்தின் ஸ்தாபகர் சுவாமி சிவானந்தா மகரிஷியின் 105 வது ஜெயந்தி தின விழா எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் சுவாமி சிவானந்தா இலவச சிகிச்சை நிலையம் காலை 9 மணியளவில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்படும். இந்நிலையத்தில் சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்கள் தங்கள் பெயர்களைச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## உயிரிழந்தவர் நாகர்கோயில் வாசி

தென்மராட்சி, செப். 2

நேற்று முன்தினம் நண்பகல் 1 மணியளவில் பலாலிப் படை இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்த இளைஞர் நாகர்கோவிலைச் சேர்ந்த சே. இராஜகோபால் [வயது 19] என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடற்கரையில் பண் எண்ணெய் பரல்களுடன் நின்ற படகு ஒன்றில் குண்டு விழுந்து வெடித்ததில் இந்த இளைஞர் பலத்த காயத்துக்கு இலக்காகி பின்னர் உயிரிழந்தார்.

படகு சேதமடைந்த நிலையில் கடலில் மூழ்கி விட்டது. நேற்று முன் தினம் நடைபெற்ற குண்டு வீச்சின் போது இரண்டு பொம்மர்கள் மொத்தம் பதினொரு குண்டுகளை வீசின.

(உ-15-117)

## பலாலியிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்றும் —

ஆனால் கஞ்துறைக்கு இடமாற்றப்பட்டதால் அக்கடிதங்களை ஒப்படைக்க முடியாது போய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள தமது தலைமையக அதிகாரிகள் அடுத்த வாரமளவில் களுத்துறைக்கு விஜயம் செய்யும் போது உரியவர்களிடம் கடிதங்களை ஒப்படைப்பர் என்றும் —

உறவினர்களுக்கான இக்கடிதங்களை பெற்று இங்கு அனுப்ப அவர்கள் ஏற்பாடு செய்வர் என்றும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அநேகமாக தமிழகம் செல்லும் போதும், மீன் பிடிக்கச் செல்லும் போதும் வடபகுதி கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களே இந்த 81 பேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-3]

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் கு. ப. நிமால்

செல்வன் கு. ப. நிமால் [ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன், பேராதனை பொறியியல் பீட மாணவன்] 28-08-92 கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் திரு. கு. பஞ்சரத்தினம் [ஓய்வுபெற்ற தபால் அதிபர்] — திருமதி ப. தர்மசரோஜினி [ஓய்வுபெற்ற மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியை] ஆகியோரின் செல்வக்குமாரனும், செல்வி ப. காயத்திரியின் [வர்த்தகபீடம், யாழ். வளாகம்] அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனத்தையில் 30-08-92 இல் தகனம் செய்யப்பட்டது. பருத்தித்துறை இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
மு. நாகலிங்கம்
(பெரிய தகப்பனார்)

2ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
[சி/3220]

### மரியாம்பிள்ளை எற்வேட் (செல்வரட்னம்)

சுண்டுக்குளி 7, கண்டிவீதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை எற்வேட் [செல்வரட்னம்] 28-08-1992 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, மேரிப்பிள்ளையின் அன்பு மகனும், யெசிமேரியோசெபினின் அன்புக் கணவரும், றெஜிஸ், றெஜினோல்ட், யசிந்தா, பியட்றிஸ், றெக்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேளின் மேரிமாகிறேட், காலஞ்சென்ற செபரட்ணம் என்போரின் அன்பு மாமனாரும், றூபஸ், பிறிஸ்கா, லின்டா, சுலக்ஷனா, செல்வந், பிறியானா, ஆகியோரின் பேரனாரும், இரசரட்ணம், பாலசிங்கம், ராஜசிங்கம், லூட்ஸ்மேரி, காலஞ்சென்ற நேசம், நவரட்ணம், ராசநாயகம், திரேசா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், மறைந்த அருள்திரு வேதநாயகம் அடிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக [05-09-92] சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யெசிமேரியோசெபின்
[மனைவி]

7, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(22394)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பிரேமதாஸா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோர் வழக்கில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

### நீண்ட விசாரணை

1989 ஜனவரி மாதம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 3 வருடங்கள், 3 மாதங்கள், 17 நாட்கள் வழக்கு விசாரணை நீடித்தது. இலங்கையின் சட்ட வரலாற்றில் மிக நீண்ட வழக்கு விசாரணையாக இது கருதப்பட்டது.

இரு தரப்பிலும் மொத்தம் 977 பேர் சாட்சியமளித்தனர். 27ஆயிரம் பக்கங்களில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

எதிர்மனுதாரரான திரு. பிரேமதாஸாவின் சார்பில் கிளப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை 1988 டிசம்பரில் நிராகரிக்கப்பட்டதை அடுத்து மனு மீதான விசாரணை 1989 ஜூன் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமானது.

### நீதியரசர்கள் மாற்றம்

முன்னாள் பிரதம நீதியரசர்களான எச். டபிள்யூ. தம்பையா, பாரிந்த ரணசிங்கா, தற்போதைய பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா ஆகியோர் இவ்வழக்கை ஆரம்பத்தில் விசாரித்தனர்.

வழக்கு விசாரணை நீண்டு செல்லச் செல்ல இடையில் ஒவ்வொரு நீதியரசர்களாக ஓய்வுபெற்றுச் சென்றனர். இவ்வாறு நான்கு நீதியரசர்கள் ஓய்வுபெற அவர்களின் இடங்களுக்கு புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டனர்.

### தீர்ப்பு

இந்த வழக்கை ஆரம்பம் முதல் விசாரித்து வந்த ஒரேயொரு நீதியரசரான தற்போதைய பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ்.டி. சில்வா நேற்று தமது தீர்ப்பின் சாராம்சத்தை சுமார் 1 மணி நேரம் வாசித்தார்.

அவருடன் சேர்ந்து மூன்று நீதியரசர்களும் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தனர்.

எனினும் தனிப்பட்ட தீர்ப்பை வழங்கிய நீதியரசர் எஸ். பி. குணவர்த்தனா ஏனைய நீதியரசர்களின் பெரும்பான்மைத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை வழங்கப்படத் தேவையில்லை என்று அவர் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் —

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 45 சதவீத மக்கள் பயமுறுத்தலினால் வாக்களிக்கவில்லை என்றும் —

ஆதலால் அத்தேர்தல் சுயாதீனமற்றதும் நீதியற்றதுமாகும் என்றும் மனுதாரரான சிறிமாவோ தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் —

பயங்கரநிலை காரணமாக வாக்காளர்கள் வாக்களிக்க முடியவில்லை என்பதையும், வாக்களிக்கத் தவறியோர் தமது வாக்குகளைப் பிரயோகித்திருப்பின் தமக்கு வெற்றி கிடைத்திருக்கும் என்பதையும் மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்று தெரிவித்தனர்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எச். எல். டி. சில்வாவும், ஜனாதிபதி பிரேமதாஸாவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்பியுமான கே. என். சொக்ஸியும் ஆஜராகி வாதாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-எ-த-10]

## ஜே. ஆர். வெளியிட்ட தகவல்:

# யாழ். நூலகத்தை எரித்தவர் இப்போது லேக் ஹவுஸில்!

கொழும்பு, செப். 2

யாழ்ப்பாணம் நூலகத்துக்குத் தீ வைத்துக் கொளுத்திய உயர் பொலீஸ் அதிகாரி, தற்போது லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பெரிய பதவி வகிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

கடந்த புதன்கிழமை கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜே. ஆர். ஜெயவர்த்தனா இதனைத் தெரிவித்தார் என்றும் —

இந்த வைபவத்தில் பல வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்து கொண்டனர் என்றும் —

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் —

யாழ். நூலகம் எரிக்கப்பட்டதற்கும் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதற்கும் பொறுப்பாக இருந்தவர்கள் இப்போது ஐக்கியதேசியக் கட்சியில் இல்லை என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கடந்த வாரம் பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்காவையே அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டார் எனக் கருதப்படுகிறது.

[உ-10]

# செலவுத் தொகை செலுத்த வீடு வீடாக நிதி கேட்போம்!

## சிறிமாவின் சட்டத்தரணி தகவல்

கொழும்பு, செப். 2

ஜனாதிபதித் தேர்தல் வழக்கின் செலவுத் தொகையைச் செலுத்துவதற்காக வீடு வீடாக மக்களிடம் சென்று நிதி கோரப்போகிறோம். ஜனாதிபதி பிரேமதாஸாவின் செலவைச் செலுத்துவதற்காக ஒவ்வொரு குடும்பத்தவரிடமிருந்தும் நிதி — ஒரு சில சதங்களாவது — சேகரிக்கப் போகிறோம்.

— இவ்வாறு கூறினார் சிறிமா தரப்பு சட்டத்தரணியான நிமால் ஸ்ரீபால டி சில்வா.

வாக்களிக்காமல் போன 25 லட்சம் வாக்காளர்களும் சரியான சந்தர்ப்பம் கிடைத்தால் யாருக்கு வாக்களித்திருப்பார்கள் என்பதை கூற முடியாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டிருப்பதை நாம் ஏற்க முடியாது.

நீதிமன்றின் நிலைப்பாட்டை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் உயர்நீதிமன்றுக்கு மேலால் இந்த வழக்கை எடுத்துச் செல்ல சட்டத்தில் இடமில்லை.

எனவே இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவோ அல்லது ரத்துச் செய்யச் சொல்வதற்கோ வழியில்லை.

எனவே தீர்ப்பில் உள்ள தொய்வுகளை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்ல கூட்டங்கள், விவாதங்களை நடத்தவுள்ளோம்.

— இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

[உ-10]


# தேன் சுரபி

சைவ உணவகம்

"மதிய உணவு"

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட சலுகையுண்டு.

பலாலி றோட்,
திருநெல்வேலிச் சந்தி.
[சி-3207]


## மரண அறிவித்தல்

### திரு. வைத்திலிங்கம் ஆறுமுகம்

காரம்பனைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் திரு. வைத்திலிங்கம் ஆறுமுகம் நேற்றுக் காலமானார்.

அன்னார் புனிதவதி [இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி] அவர்களின் அன்புக் கணவரும், Dr. யசோதரா, Dr. சசிதரா, செல்வன் சபேசன் [மருத்துவபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், பொ. தர்மரத்தினம் [பொறியியலாளர்], பொ. சண்முகரத்தினம் [பொறியியலாளர்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. சபேசன்
[மகன்]

91/18, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
[22395]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org